அரசின் கொள்கை முடிவு பற்றிய ஒன்றாகும். இப்போது வயது வரம்பைத் தளர்த்துவது பற்றிய கொள்கை முடிவை அரசு எடுக்கவில்லை. அதற்கும் மேலே ஒன்றை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 14-10-1980 அன்று பணி நீக்கம் செய்யப்பட்ட பகுதி நேர கிராம அலுவலர்கள் 23,010 பேர். அவர்களையெல்லாம் தெருவிலே விட்டுவிடாமல் கருணையே உருவான கலைஞரின் தலைமையிலே உள்ள அரசு, அவர்களுக்கு சிறப்பு ஓய்வூதியமாக மாதம் ரூபாய் 250/-ஐ 12,260 பேர்களுக்கு கொடுக்கிறது. அதுமட்டுமல்லாமல், பழைய Village Officers-க்கு பதவித் தகுதிகள் இருக்குமானால், ஏற்கெனவே தகுதி இல்லாமல் பதவியில் மட்டும் பணியாற்றி இருப்பார்களானால் அந்தக் காலியிடத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தகுதியின் அடிப்படையில் ஏற்கெனவே வேலை பார்த்தவர்தானா என்ற கண்டிஷன் அடிப்படையில் பணிநியமனம் செய்கிறார்கள். ஏற்கெனவே 14-11-1981 அன்று சட்டம் கொண்டு வந்து கிராமப் பணியாளர்கள் 23,010 பேரை பணி நீக்கம் செய்த பிறகு இப்போது Screening test வைத்து, அந்தத் தேதியில் தகுதியுடையவர்கள் மீண்டும் சர்வீஸ் கமிஷன் மூலமாக Village Administrative Officers-களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் எந்த சட்டச் சிக்கலும் இல்லை, யாரும் பாதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 36, திரு. ஆ.செ. மணிக்கண்ணன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

36—

மாணவர் விடுதி கட்டடம்

***34454—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூரில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

2001 ஜனவரி 23]

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநாவலூரில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ.செ. மணிக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவலூர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி நீண்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது கிராமப் பகுதி என்பதால் கட்டட வசதி, அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாத ஒரு சூழ்நிலையில் அங்கே இருந்து கொண்டு இருக்கிறது. அதனால் மாணவர்கள் தங்கிப் படிக்க பல்வேறு சிரமங்கள் உள்ளன. அதற்குத் தேவையான நிலத்தைக்கூட வட்டாட்சியர் அவர்கள் ஒதுக்கீடு செய்து அந்தத் துறைக்கு ஒப்படை செய்திருக்கிறார்கள். மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக முன்மொழிவும்கூட அரசுக்கு வரப்பெற்றுள்ளது. அதை இந்த ஆண்டாவது எடுத்துச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்திலுள்ள 43 மாணவ-மாணவியர் விடுதிகளில் 7 விடுதிகள் மட்டுமே அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 36 மாணவ-மாணவியர் விடுதிகள் வாடகை கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருங்காலத்திலே நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 37, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்.

37—

பவானி ஆற்றில் மாசுபடுத்துதல்

***40026—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—